ஆடவர், வனிதையர்
விரும்பும் அழகு
வண்ணப் புடைவைகளுக்கு
சிறந்த இடம்:
ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளை
தெரிவு செய்திட
இன்றே நாடுங்கள்
ச. லிங்கநாதன்
வண்ணச் சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
[சி-513]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 25 புதன்கிழமை (08 - 02 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 73

# பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட மாட்டாது

## நாடாளுமன்றில் அமைச்சர் ரத்வத்த நேற்று திட்டவட்டமாக அறிவித்தார்

கொழும்பு, பெப்ரவரி 8

பூநகரியில் உள்ள இராணுவ முகாம் அகற்றப்படமாட்டாது என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று நாடாளுமன்றத்தில் திட்டவட்டமாக அறிவித்தார்:

பூநகரி - சங்குப்பிட்டிப் பதையை பொதுமக்கள் பாவனைக்குத் திறப்பதற்காக, பூநகரியில் உள்ள இராணுவ முகாமை இப்போதுள்ள இடத்திலிருந்து அகற்றுவதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அவர் கூறினார்.

அரசாங்கத்தின் இந்த முடிவு விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் கொழும்பு, கம்பஹா மாவட்டத்தின் சில பகுதிகளிலும் உள்ள அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் ரத்வத்த மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

அவர் தமது பேச்சின்போது மேலும் தெரிவித்ததாவது:-

மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக் குழுக்கள் நாளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மேயர் கணேசலிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைவரும்

### ஐ.தே.க. உறுப்பினர்கள் முஷ்தீபு

கொழும்பு நகரின் பதில் மேயராகப் பணிபுரியும் திரு. கே. கணேசலிங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர ஐ.தே. கட்சி மாநகரசபை உறுப்பினர்களே தயாராகி வருகின்றனர்.

சிங்களப் பத்திரிகையான 'ஹிரு' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

திரு. கணேசலிங்கம் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவருடன் தொடர்புகளை வைத்திருப்பதாகவும் -

அதனால் ஐ.தே.கவின் உள் இரகசியங்கள் அந்த அமைச்சரை சென்றடைந்து விடுவதாகவும்—

சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடவுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கொழும்பு மாநகரசபை நிர்வாகம் ஐதேகவின் கைகளில் உள்ளது தெரிந்ததே. (ஓ-10)

## பொ.ஐ.மு. அரசாங்கத்தின் முதலாவது "பட்ஜெட்" இன்று சமர்ப்பிக்கப்படும்

### தபால் கட்டணம் உயரும்

கொழும்பு, பெப் 8

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முதலாவது 'கன்னி' வரவுசெலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சருர் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ எல். பீரிஸ வரவு - செலவுத்திட்ட உரையை நிகழ்த்துவார்.

இவ்வரவு - செலவுத் திட்டத்தில் 1995 நிதி ஆண்டுக்கான உத்தேச செலவினம் 16 ஆயிரத்து 700கோடி ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டுக்கான செலவினம் 2 ஆயிரத்து 500 கோடி ரூபா குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட செலவினம் 19 ஆயிரத்து 200கோடி ரூபாவாகும். ஆயினும் வரவு செலவுத் திட்டத்தில் இவ்வாண்டு பாதுகாப்பு செலவினம் 2ஆயிரத்து 400 கோடி ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்திலும் பார்க்க 10 கோடி ரூபாவால் அதிகம்.

கடந்த வருடம் பாதுகாப்புச் செலவின மதிப்பீடு 2ஆயிரத்து 300கோடி ரூபாவாகும்.

நிதி அமைச்சின் செலவினமாக 2 ஆயிரத்து 300 கோடி ரூபாவும் பொது நிர்வாக உள் விவகார பெருந்தோட்டத் தொழில் துறை நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செலவீடாக ஆயிரத்து 600 கோடி ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான துண்டு விழும் தொகை சுமார் 8,000 கோடியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆடம்பரப் பொருள் மீதான வரிவிதிப்பு அதிகரிக்கப்படலாம் எனவும் உள்ளூர் தபாலுக்கான கட்டணம் ஒரு ரூபா ஐம்பது சதமாக அதிகரிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-7-4]

## ஐ.தே. கட்சி எம்.பிகள் இன்று பதவிப்பிரமாணம்?

கொழும்பு, பெப். 8

ஐ.தே.க. தேசியப்பட்டியலில் வெற்றிடமாகவுள்ள இரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படவிருக்கும் இருவரும்இன்று நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வர் எனத் தெரிய வருகிறது.

சரத் கோங்காகே,எம்.எச். முஸ்தபா ஆகிய இருவருமே இப்பதவிகளுக்கு நியமிக்கப்படலாம் எனத் தெரியவந்துள்ளது. (ஓ-6)



'முச்சந்தி முரளி'

யு என். பி. காறரின்ரை பாணியிலை எல்லே உந்த அடி நடந்திருக்குது!

## பின்லாந்து ரி.வி. குழுவினர்

யாழ்ப்பாணம், பெப். 8

பின்லாந்து நாட்டின் தொலைக்காட்சி நிறுவனத்தின் படப்பிடிப்பாளர் குழுவினர் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் கிளாலி ஊடாக யாழ். வந்த இந் நிறுவனத்தின் இரு படப்பிடிப்பாளர்களும் யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலைமையைப் படமாக்கிக் கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேட்டி கண்ட இவர்கள் நேற்று இங்கிருந்து புறப்பட்டனர். (ஒ 4)

நுகேகொடையில் இலக்கத்தகடு இன்றி

## "ஹைஏஸ்" வாகனத்தில் வந்தவர்கள் பத்திரிகை ஆசிரியர் மீது தாக்கு!

### முகமூடி தரித்தவர்கள் கைவரிசை

கொழும்பு, பெப். 8

''சண்டே லீடர்'' ஆங்கில பத்திரிகையின் ஆசிரியர் வசந்த விக்கிரமதுங்கவும் அவரது மனைவியும் நேற்று முன்தினம் இரவு நுகேகொடையில் அவரது வீட்டுக்கு அருகில் தாக்கப்பட்டனர்

காரில் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் ''ஹைஏஸ்'' வாகனத்தில் வழிமறித்த இருவர், இவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் வசந்த விக்கிரமதுங்க காயமடைந்தார். அவரது வாகனமும் சேதமடைந்தது.

தாக்குதல் நடத்தியவர்கள் இலக்கத் தகடு இல்லாத வாகனத்தில் வந்திறங்கினர் என்றும், அவர்கள் முகமூடி அணிந்த நிலையில் காணப்பட்டனர் என்றும் வசந்த விக்கிரமதுங்க பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

பொ. ஐ. முன்னணி அரசைக் கண்டிக்கும் செய்திகளையும், கடிதங்களையும் பிரசுரிப்பதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இத்தாக்குதல் சம்பவத்தை தாம் கடுமையாகக் கண்டிப்பதாக தொடர்பு சாதன, சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பையும் வழங்கும்

### அமைச்சர் கதிர்காமரிடம் கிளின்ரன் நேரில் தெரிவிப்பு

வாஷிங்டன், பெப். 8

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை அங்கு நடைபெற்ற தேநீர் விருந்தில் ஜனாதிபதி கிளின்ரனுக்கும் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் நட்புறவு வாய்ந்தனவாகவும் பயனளிக்கக்கூடியனவாகவும் அமைந்துள்ளன என்று பதில் வெளிவிவகார அமைச்சரான திரு. விக்ரமசிங்க பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமுல்படுத்திவரும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக அமெரிக்க ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தி வருவதாகவும்—

அமெரிக்க அரசியல் ஆலோசகர் மொறிஸ் கிறிஸ்தோபர் இதுபற்றி மேலதிக விவரங்களை ஆராய்ந்து வருவதாகவும் வாஷிங்டன் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது. (ஒ-க)

[மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்]

## குருநாகலில் தொழிற்சாலை தீயில் எரிந்து நாசமானது

கொழும்பு, பெப். 8

குருநாகல் மாவட்டத்தில் பன்னலவில் உள்ள வெளிநாட்டவர் ஒருவருக்குச் சொந்தமான நெசவுத் தொழிற்சாலைக்கு கடந்த 3 ஆம் திகதி தீ வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தீயைக் கட்டுப்படுத்த தீயணைக்கும் படையினர் சுமார் 10 மணி நேரம் போராட வேண்டியிருந்தது.

400 லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் அமைக்கப்பட்ட இந்த தொழிற்சாலையில் ஆயிரத்து 400 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள் கடந்த ஆண்டு பிற்பகுதியில் பணியாளர்களுக்கும் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் இடையில் சர்ச்சைகளும் குழப்பங்களும் தோன்றியிருந்தன.

இந்நிலையில் இப்போது தீவைப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளமை ஸ்ரீலங்காவின் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் பெரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது என கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசுக்கு எதிரான அரசியல் சக்திகள் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-இ-க-4)

மட்டு சிறைச்சாலையில் உள்ள

## 18 தமிழ் இளைஞர்கள் மீண்டும் உண்ணாவிரதம்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் தொடக்கம் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதி ஜோசப் பரராசசிங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது இத்தகவலைத் தெரிவித்தார்

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் சொன்னதாவது:- சொய்சா கமிஷன் சிபார்சின் பிரகாரம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 100 தமிழ் இளைஞர்களில் 46 பேரை விடுதலை செய்யும்படி தெரிவித்திருந்தும் இதுவரை 28 பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். மிகுதி 18 பேரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இது பாரபட்சமான செயலாகும்.

கடந்த மாதம் 5 ஆம் திகதி இவர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதம் எமது தலையீட்டால் தீர்த்து வைக்கப்பட்டது இவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது—என்றார்.

இக் குறைபாடுகள் சம்பந்தமாக மகஜின் சிறைச்சாலை தமிழ் இளைஞர்கள் சார்பில் தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தை அவர் சபையில் வாசித்தார். [ஓ-4]

## ஆளும் காங்கிரஸ் கட்சியிலிருந்து அர்ஜுன்சிங் வெளியேற்றப்பட்டார்

### அரசியல் நெருக்கடி வலுக்கலாம்

புதுடில்லி, பெப். 8

இந்தியாவின் முன்னாள் மனிதவளத்துறை, அமைச்சர் அர்ஜுன்சிங் ஆளுங்கட்சியான காங்கிரஸ் கட்சியிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இவர் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து ஆறு வருடங்களுக்கு நீக்கப்பட்டுள்ளார். கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடவும் தடை விதிக்கப்பட்டது.

புதுடில்லியில் விஜயபாஸ் கரரெட்டி தலைமையில் நேற்றுக்காலை கூடிய ஒழுங்கு நடவடிக்கைக் குழு கட்சி விரோதச் செயல்களில் ஈடுபட்டதால் அர்ஜுன்சிங்கை விலக்குவது என்று முடிவு செய்தது

அர்ஜுன்சிங் அளித்த விளக்கங்களை ஒழுங்கு நடவடிக்கைக்குழு நிராகரித்தது.

எல்லா விடயங்களையும் பரிசீலனை செய்த பின்னரே குழு இந்தமுடிவுக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒழுங்கு நடவடிக்கைக் குழு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் ம.எண்ணெய் தனியார் தருவிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப். 8

கப்பலில் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்ய விரும்பும் தனியார் மண்ணெண்ணெய் விற்பனை முகவர்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் திரு. சிவஞானத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

தனியார் முகவர்கள் மண்ணெண்ணெயை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு 8 ஆயிரம் பரல்கள் மண்ணெண்ணெய் ஏற்றிவரத்தக்க கப்பல் ஒன்று அரச அதிபரால் ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது.

புனருத்தாரணம் செய்து மண்ணெண்ணெய் விநியோகிக்கும் நிலையில் 16 மண்ணெண்ணெய் விநியோக நிலையங்கள் தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருப்பதாகவும்—

மண்ணெண்ணெய் கொள்வனவுக்கான பதிவு மற்றும் வேலைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விறகு வெட்டச் சென்றவர் சூடுபட்டு காயம்

யாழ்ப்பாணம், பெப். 8

காட்டு மிருகத்துக்கு தீர்க்கப்பட்ட வேட்டு, தவறி விறகு வெட்டிக்கொண்டிருந்த ஒருவர் மீது பாய்ந்ததால் அவர் படுகாயமடைந்தார்.

பச்சிலைப்பள்ளி கரந்தாயில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பளை, இத்தாவிலைச் சேர்ந்த எஸ். செல்வரத்தினம் (28 வயது) என்பவரே படுகாயமடைந்தவர். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)

யாழ். பல்கலைக்கழக

## கலைப்பீட மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்பு

யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட புதிய கலைப்பீட மாணவர்கள் வேட்டி அணிந்தும், மாணவிகள் சேலை அணிந்தும் வகுப்புகளுக்குச் சென்று வந்ததை நேற்று அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதுவும் அவர்கள் அனுபவித்து வரும் ''ராகிங்'' தொல்லைகளில் ஒன்றெனத் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தினுள் வரும்போதும் வெளியேறும் போதும் கலைப்பீட புதிய மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளை உருட்டிச் செல்லுமாறும் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அறியவந்தது.

இதேவேளை மூன்றாம் வருட மாணவர் ஒருவர் வகுப்புகளில் கலந்துகொள்வதிலிருந்து தடுக்கப்பட்டதை அடுத்து—

மூன்றாம் வருட கலைப்பீட மாணவர்கள் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

இடைநிறுத்தப்பட்டிருக்கும் மாணவர் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பல்கலைக்கழக நிர்வாக வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

''பட்டதாரிகளா? வண்டில் சாரதிகளா?; கலைப்பீடம் என்ன சந்தையா?; மாட்டு வண்டில் உள்ளே! மாணவர்கள், வெளியேயா?; நிர்வாகமே மௌனம் சாதித்தால் பகிஷ்கரிப்பு தொடரும்;'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்றுக் காணப்பட்டன. (அ-4-7)

யாழ். வந்து திரும்பிய

## கண்காணிப்புக் குழுவினர் அறிக்கை சமர்ப்பிப்பு

மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுவின் தலைவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த சந்திப்புக் குறித்த அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேச்சுவார்த்தை நடத்திவிட்டு அன்று மாலையே கொழும்பு திரும்பிய கண்காணிப்புக்குழுவின் தலைவர்கள் நால்வரும் தமது பேச்சுவார்த்தை குறித்த அறிக்கையினை அரசிடம் கையளித்துள்ளனர். [ஓ-7]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேட்டைக்குச் சென்றவர் பொறியில் சிக்கி காயம்

யாழ்ப்பாணம், பெப். 8

காட்டு மிருகத்துக்கு வைக்கப்பட்ட பொறிவெடியில் சிக்கி ஒருவர் காயமடைந்தார்.

பளை, முகாவில் பகுதியில் நேற்றுக் காலை 5 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த இரத்தினம் திசராசசிங்கம் (வயது 30) என்பவரே கயாமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவரும் வேட்டைக்குச் சென்ற வேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (ஒ-15)

## செபஸ்தியார் ஆலய திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 8

மாசியம்பதி புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அருட்தந்தை ஜுயிஸ் பொன்னையாவின் கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து, திருச்சுருவ பவனியும் நடைபெறும். (இ-5)

## பட்டம் விட்ட சிறுவன் சடலமாக மீட்பு

அளவெட்டி, பெப். 8

பட்டம் ஏற்றி விளையாடும் போது பின்பக்கமாக நகர்ந்து சென்ற சிறுவன் கால்தடக்கி கிணற்றில் வீழ்ந்ததால் மரணமானான்.

இப்பரிதாபச் சம்பவம் அண்மையில் சுன்னாகம், சூளானை வயல் வெளியில் இடம்பெற்றது.

விளையாடச் சென்ற மகனைக் காணாது தேடிச் சென்ற தந்தையாருக்கு மகனின் உயிரற்ற சடலத்தையே காணமுடிந்தது.

மகாலிங்கம் சயந்தன் என்ற சிறுவனே இச்சம்பவத்தில் மரணமானவன்.

[இ-13-153]

## இசை சொற்பொழிவு

கொழும்பு, பெப். 8

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீசிவபூதநாத சுவாமி கோயில் அலங்காரத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

10 நாட்கள் நடைபெறும் இந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு தினமும் இரவு 8மணி தொடக்கம் நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் அருள்மொழி இசை அரசு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'திருவிளையாடற் புராணம்' பற்றி தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (இ)

## மழையால் அறுவடை பாதிப்பு

குருநகர், பெப். 8

குடாநாட்டில் கடந்த சில நாட்களாக விட்டு விட்டுப் பெய்த மழையால் வயல்களில் அறுவடை மற்றும் சூடு மிதித்தல் என்பன பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆங்காங்கே பெய்த பெருமழையால் பயிர்கள் நிலத்தில் சாய்ந்து, நீருள் அமிழ்ந்துள்ளதால் நெல் மணிகள் பழுதடையக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெவிக்கப்படுகிறது. (இ-51-5)

# தம்முடனும் பேச்சு நடத்தவேண்டும் என்கின்றன தமிழ்க் கட்சிகள்

கொழும்பு, பெப். 8

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவது இன்றியமையாதது ஆகும். ஆனால் அதேவேளையில் அரசாங்கம் மற்றைய தமிழ் அரசியல்கட்சிகளுடனும்பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் தமிழர் விடுதலைக் கூட்டணி, டி.பி.எல்.எவ் (புளொட்), அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்கள் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவருமான யோசெப் பரராசசிங்கம், கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி விரும்புகிறது என்றார்.

வடக்கிலும் கிழக்கிலும் 12 ஆண்டுகாலமாக நடைபெறும் இரத்தம் சிந்தும் மோதலுக்கு முடிவு காண வேண்டும் என்றால் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி எப்பொழுதும் கூறிவந்துள்ளது. இது சாதாரண நியாயம், இதனை யாரும் மறுத்துரைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று வடக்கு — கிழக்கு யுத்தமும் தமிழ்ப்பிரச்சினைக்கான தீர்வும் பிணைந்திருக்கின்றன.

யுத்தத்துக்கு முடிவுகட்ட வேண்டும் என்றால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும்; வேறு எவருடனும் அல்ல என்றார் அவர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளரான குமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில் தமது கட்சி, அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை வரவேற்பதாகக் கூறினார்.

அத்துடன் தமிழர் பிரச்சினைக்கு கடதாசியில் ஒரு தீர்வு ஏற்படும் என்றால் வடக்கு - கிழக்கில் அதை அமுல்படுத்துவது முற்றிலும் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சார்ந்தது என்பது தெட்டத் தெளிவு எனவும் அவர் கூறினார். (இ-க)

## வெளிவாரிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு, பெப். 8

பேராதனைப் பல்கலைக் கழகம் 1995ஆம் ஆண்டுக்கான வெளிவாரிப் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி உள்ளது.

எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கலைமாணித் துறைக்கு விண்ணப்பிப்போர், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்றும் —

150 புள்ளிகளுக்குக் குறையாத வெட்டுப்புள்ளி பெற்றிருக்க வேண்டும் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

1994 டிசம்பரிலும் அதற்கு முன்பும் பதிவு காலாவதியாகி உள்ள மாணவர்கள் தங்கள் பதிவை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும்—

தமது பதிவு காலாவதியாகி 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற கீழ்க்காணும் பரீட்சைகளுக்குத் தோற்றி பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்பின் அவர்களுக்கு உரியதாகாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1994 ஏப்பிரலில் நடைபெற்ற பொது விசேட கலைமாணிப் பரீட்சை —

1994 ஜூலையில் நடைபெற்ற பொதுவிஞ்ஞான மாணிப் பரீட்சை—

1994 டிசம்பரில் நடைபெற்ற முதலாம் ஆண்டு கலைப் பரீட்சை —

1994 ஒக்ரோபரில் நடைபெற்ற முதலாம் ஆண்டு விஞ்ஞானப் பரீட்சை ஆகியவற்றுக்கு இது பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். மாவட்டத்திலுள்ள கல்வி வலயம்-1,2ஐச் சேர்ந்த சகல தொலைக்கல்வித் துறைச் சிரேஷ்ட போதனாசிரியர்களுடனானமுக்கியகலந்துரையாடல் ஒன்று இன்று புதன் மாலை4மணிக்கு யாழ். வலயம்-1 கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

முக்கிய விடயங்கள் பற்றி இதில் கலந்துரையாடப்பட இருப்பதால், சிரேஷ்ட போதனாசிரியர்கள் தவறாது சமுகமளிக்குமாறு வலயம்- 1 கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [இ-4]

## வெட்டுப் புள்ளி திருத்தம்

கொழும்பு, பெப். 8

94- 95 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான வெட்டுப்புள்ளி விவரங்கள், இலங்கை வானொலியின் தரவின் அடிப்படையில் கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை உதயனில் வெளியிடப்பட்டிருந்தன.

உத்தியோக பூர்வமாக கிடைக்கப் பெற்ற தகவல்கள் அடிப்படையில் சில வெட்டுப்புள்ளிகளின் விவரங்களை மீண்டும் இங்கு தருகின்றோம்.

முல்லைத்தீவு மாவட்டம்
மருத்துவம்— 243,
பௌதிகவிஞ்ஞானம்—196,
வர்த்தகம்— 238,
சட்டம்— 265,
கிளிநொச்சி மாவட்டம்
பொறியியல்— 231
அம்பாறை மாவட்டம்
சட்டம்— 274

(இ-14)


## மனமார்ந்த நன்றி!

கடந்த 25 ஆம் திகதி தவறவிட்ட எனது ¾ பவுண் தங்கச் சங்கிலியைக் கண்டெடுத்து யாழ். ராஜு ஸ்ரோர்சில் ஒப்படைத்த அத்தியடியைச்சேர்ந்த ஸ்ரீ சிவகுமாரனுக்கும் அதை எனக்குத் தந்த ராஜு ஸ்ரோர்ஸ் உரிமையாளருக்கும் ஊழியருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி. துரைராசா
12, முதலாம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை.

(35094)

## ★ உபநயன அழைப்பு ★

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பவவருடம் தைத்திங்கள் 27 ஆம் நாள் (10-02-95) வெள்ளிக்கிழமை மிருகசிரிட நட்சத்திரமும் தசமி திதியும் சித்தயோகமும் கூடிய சுபநன்னாளில் காலை 8-35மணி முதல் 945மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

எமது சிரேஷ்ட புத்திரன்

★ சிரஞ்சீவி பிரதீப் சர்மா ★

அவர்களுக்கு

உபநயனஞ் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வில் குடும்ப சமேதராகப் பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கிறோம்

சுபமஸ்து

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
மார்கண்டேயர் பிரேமா
தம்பதிகள்
மாதகல்

தற்போதைய முகவரி:
C. M. S. லேன்.
கொக்குவில் மேற்கு.

(35095)

## புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

ஆண்டு 6, 7, 8

கணிதம் — தி. சந்திரகுமார்
விஞ்ஞானம் — ராஜா
சமூகக்கல்வி — ஐ. புவனேந்திரன்
ஆங்கிலம் — றமணதாசன்
தமிழ், சமயம் — ஞான. திருக்கேதீஸ்வரன்

[C/346]

## பதவி வெற்றிடம்

ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப்பதிவு தகைமையுள்ள 25-35 வயதுக்குட்பட்ட ஆண் அல்லது பெண் ஊழியர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

15-02-1995 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை நேரிலோ, தபால் மூலமோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தலைவர் / செயலாளர்,
யாழ். வணிகர் கழகம்,
21, மேல்மாடி, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்

(சி 532)

## JAFFNA COLLEGE

Undergraduate Dept.

464, Hospital Road, Jaffna.

# VACANCY

FOR AN

ACCOUNTS CLERK

Wanted an Experience Accounts Clerk, with atleast three years experience Retired persons also can apply.

Males and those who are living in the proximity of Jaffna Town preferred.

Salary not less than Rs. 2000.

Apply with full Bio-Data, before 16th of February 1995 to the Director, Jaffna College Undergraduate Department, 464, Hospital Road, Jaffna.

DIRECTOR

[C-369]

## தாதிப் பயிற்சி நெறி

NURSING

ஆரம்பம்:- 15 – 02 – 1995

★ சிறந்த தகுதிவாய்ந்த விரிவுரையாளர் குழு
★ இலவச ஆங்கில வகுப்புக்கள்
★ பரீட்சை முடிவில் தகுதி வாய்ந்த சான்றிதழ்களுடன் கூடிய ஒரு மாத கால இலவச செய்முறைப் பயிற்சி.

விவரங்கட்கு:-

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14 St, PETER'S LANE,
JAFFNA.

[சி/366]

## 1 -ம் வருட நினைவஞ்சலி



மண்ணில்: 12 — 08 — 1918

விண்ணில்: 09 — 02 — 1994

திருமதி ஜேக்கப் அன்னம்மா

இவரின் ஆன்ம சாந்திக்காக 09- 02- 95 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியில் பங்குபெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

அருள் திரு. யே. நீக்கிலஸ்

(35101)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 18 — 09 — 1955

மறைவு: 10 — 01 — 1995

திருமதி சிவமூர்த்தி சின்னம்மா

(குட்டியா - வல்வை)

அன்பின் உருவே! அரவணைத்தென்றும் - எமை
ஆதரித்த அன்னையே! தாயே!
துன்பம் சேர வைத்தேன் நீ துயில் கொண்டாய்
துடித்திடும் மனங்களின் துணைதான் இனியாதோ!

இங்ஙனம்;
கணவன், பிள்ளைகள்

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(8232)

## விமான தொடர்புச் சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

விமான தொடர் அம்பியூலன்ஸ் இணைப்பு

சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பயணப்பதிவு செய்யும் நேரம்:

கலை 9-00 முதல் மாலை 5-00 வரை

குறிப்பு:

நோயாளர்களுக்கும், வயோதிபர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஒருவழிக் கட்டணம் ரூபா 3,500

[விமானக் கட்டணம் உட்பட]

தர்மிஷா ரவல்ஸ், குமரன் பயணிகள் விடுதி,
அறை இல. 6,
67, அருந்கனா வீதி (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம்.

[35093]

## 31 -ம் நாள் நினைவஞ்சலி

செல்லத்கண்டு சிவக்கொழுந்து

அல்போடும், பண்போடும் எமை வளர்த்து ஆளாக்கிய தெய்வமே! உன் நினைவுகள் என்றென்றும் எம் உள்ளங்களில் நிறைந்து நிற்கும். உமது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் நினைவாக இன்று (புதன்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு உடுவிலில் நடக்கும் அந்தியேட்டி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கிறோம்.

இ. வேலும்மயிலும் (E. V. M. மருமகன்,
மதுரம் வேலும்மயிலும் (மகள்),
மணிவண்ணன், மதிவண்ணன்,
மணிமாறன், மேனகா,
மதியழகன், மதிரூபன் (பேரப்பிள்ளைகள்),
மற்றும் பேரப்பிள்ளைகள், சகோதரர்மார்,
பெறாமக்கள்

சக்தி இல்லம்,
மானிப்பாய் வீதி,
உடுவில்.

(சி/533)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விவசாய பயிற்சி வகுப்பு

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவருக்கான விவசாய பயிற்சி வகுப்பொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி. ப. 2-30 மணிக்கு சுந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

உடுவில் சமநல சேவை நிலைய உத்தியோகத்தரால் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்பில் நெல் அறுவடையின்பின் அவரைபயிரிடல் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை என்பன பற்றி விளக்கமளிக்கப்படும். (இ-152-5)

# வடக்கு-கிழக்கு பிரச்சினை: சமஷ்டி முறையிலான தீர்வு

## தமிழ்க் கட்சிகள் யோசனை

கொழும்பு, பெப். 8

அரசமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு பல அரசியல் கட்சிகள் யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளன.

தமிழ்க் கட்சிகள் சமஷ்டி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரி உள்ளன.

அநேகமான கட்சிகள் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளன.

சுவிற்சர்லாந்தின் 'கன்ரன்' அமைப்பு முறையை ஒத்த சமஷ்டி அரசியலமைப்பு வடக்கு-கிழக்கு அதிகாரப் பகிர்வின் ஒரு அலகாக இருப்பதை தாம் விரும்புவதாக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் திரு. த. சித்தார்த்தன் கூறியிருக்கிறார்.

நாம் வடக்கு-கிழக்கிற்குத் தனியான நேரடி சட்ட சபையைக் கோருகிறோம் என்று ஈ. பி. ஆர். எல். எவ். பொதுச் செயலாளர் திரு. கே. கேதீஸ்வரன் கூறினார். (இ-க)

## உருளைக்கிழங்கை சேமித்து வைக்க கொட்டகை வசதி

### மக்கள் வங்கி கடன் வழங்கும்

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டுள்ள ஆயிரம் விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கு சேமிப்பதற்கான கொட்டகைகள் அமைக்க மக்கள் வங்கி கடனுதவி வழங்க முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இம்முறை அதிகமான விவசாயிகள் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டிருப்பதால், அவர்கள் நஷ்டம் ஏற்படாத வகையில் கிழங்கை சேமித்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும் என்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உருளைக்கிழங்கை சேமித்து வைப்பதற்கான ஒரு கொட்டகை அமைக்க ஒரு லட்சம் ரூபா தேவைப்படும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

5 வருடங்கள் வரை பாவிக்கக்கூடிய இச் சேமிப்பு கொட்டகைகளை 10 விவசாயிகள் சேர்ந்து அமைத்துக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-4]

## யூறியா - ரி. எஸ். பி. உரம் மானிய விலையில்

### உலகசந்தையில் விலை உயர்வு

கொழும்பு, பெப் 8

நெற்பயிருக்கு பயன்படுத்தி வரும் யூறியா, ரி. எஸ். பி. ஆகிய உர வகைகளை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

உலக சந்தையில் இவற்றின் விலை அதிகரித்ததே இதற்குக் காரணம் ஆகும்.

யூறியா மெற்றிக் தொன் 160 டொலரில் இருந்து 240 டொலராக உயர்ந்துள்ளது.

ரி எஸ். பி. மெற்றிக்தொன் 160 டொலரில் இருந்து 205 டொலராக உயர்ந்துள்ளது.

விலைகள் இறங்கும் வரை இந்த வகை பசளைகளுக்கு தொடர்ந்து மானியம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

## புலிகளின் குரல் வானொலியில்

08 - 02 - 1995

புதன் இரவு

- ★ 8-01 — குயிலோசை — நிகழ்ச்சியில் ''இசை நாடக மேடைப் பாடல்கள்''
- ★ 8-20 — ஏர்முனை — விவசாயத்திற்கு நன்மையானது இயற்கைப் பசளையே
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — ஆர்த்தி எழுதிய ''வெளிநாட்டு மாப்பிள்ளை''
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

09 - 02 - 1995

வியாழன் காலை

- ★ 7-02 — மாவீட வணக்கம்
- ★ 7-15 — விடுதலைக் கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00— மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

புதன் மாலை

- ★ 5-01 —.சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 6-30 — மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# நோயாளர் நலன்புரி சங்கக்கொடிவாரம்

யாழ்ப்பாணம், பெப் 8

நோயாளர் நலன்புரிச் சங்கம் தனது சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் இம்மாதம் 6 ஆம் திகதி முதல் கொடிவாரமாக அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கேணல் கிட்டு சாலை (ஆஸ்பத்திரி வீதி) யில் உள்ள அதன் அலுவலகத்தில் கொடிவாரம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தமிழீழ மருத்துவப் பிரிவு பொறுப்பாளர் திரு. மனோஜ். யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர். நவமலர் கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். கல்வி வலயம் -1 இன் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தமிழீழ தேசியக் கொடியை திரு. மனோஜும், நலன்புரிச்சங்கக் கொடியை வைத்திய கலாநிதி சி. சிவபாலனும் ஏற்ற, மங்கள விளக்கை டாக்டர். நவமலர் கனகரட்ணமும், செல்வி. தி. பெரியதம்பியும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

இந் நிகழ்வில் வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், பிரபல வர்த்தகர்கள், பிரமுகர்கள் என பலதரப்பட்டவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

### சேவை விஸ்தரிப்பு

இதற்கிடையில் கடந்த காலங்களில், மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்ட வறிய நோயாளர்களைப் பராமரித்தல் —

சிகிச்சை பெற்று வெளியேறுபவர்களுக்கு தகுந்த போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் —

ஆதரவற்ற நோயாளர்களுக்கு பராமரிப்பு சேவையினை வழங்கல் —

தேவை ஏற்படும் சமயங்களில் குருதிக் கொடையாளர்களை ஒழுங்கு செய்தல், குருதிக் கொடையை ஊக்குவித்தல் —

நோயாளர்களுக்கான நூலக சேவை —

மருத்துவமனைகளுக்கு வேண்டிய பொருள்களை அன்பளிப்பு செய்தல் —

பின்தங்கிய பிரதேசங்களில் மருத்துவ சேவைகளை வழங்கல் — போன்ற பணிகளைச் செயற்படுத்தி வந்த மேற்படி அமைப்பு மேலும் தன் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவுள்ளது.

எதிர்காலங்களில் மனநோயாளர் பராமரிப்பு இல்லங்களை நிறுவவும் நோயாளர்களுக்கான அவசரப் போக்குவரத்து வாகன வசதிகளை ஏற்படுத்தவும் மருத்துவ மனைகளில் நிலவும் பற்றாக் குறைகளை நீக்கும் வகையில் உதவிகளைச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (இ-7-5-14)

## குமணவில் வந்த லக்ஸ்பிறே பக்கெற்றுகள் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ''குமண'' கப்பலில் எடுத்து வரப்பட்ட லக்ஸ்பிறே பால்மா பக்கெற்றுக்கள் உடைந்து சேதமடைந்தன.

கப்பலில் லக்ஸ்பிறே பைக்கெட்டுகளுக்கு மேல் சீனி மூடைகளை அடுக்கி வைத்ததாலேயே லக்ஸ்பிறே பைக்கெட்டுகள் விநியோகிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்திருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தசீனி மூடைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வர்த்தகர் ஒருவருக்கு வந்ததாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [இ-17]

# 7 பிரிவுகளாக நாட்டைப் பிரித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## தேசமீட்பு முன்னணி ஆலோசனை

பூகோள அபிவிருத்தி தேவைகளுக்கு ஏற்ப றுகுணு, மாயா, பீட்டி, யாழ்ப்பாணம், அம்பாறை, மலையகம், ஊவா எனும் 7 பிரிவுகளாக நாட்டைப் பிரிப்பதன் மூலம், இனப்பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வைக் காண முடியும்.

இவ்வாறு தேச மீட்பு முன்னணியின் தலைவரான ஆரிய புலேகொட தெரிவித்துள்ளார்.

அண்மையில் நுகேகொடையிலுள்ள தமது வாசஸ்தலத்தில் அவர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே முன்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலங்களில் வடக்கு — கிழக்கு, ஊவா, தென் மாகாணங்களில் 250 பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் கொல்லப்பட்ட நான்கு மாணவர்களின் தலைகளை அவர்களது பெற்றோரிடம் கொடுப்பதற்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் குழு ஒன்றினால் பெறப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளில் ஆஜரான சட்டத்தரணி காஞ்சனா அபேபால உட்பட பல மனித உரிமைகள் சங்க உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு புகார் செய்வதற்கான கால எல்லையை நீடிக்கும்படி நீதிய மைச்சரிடம் கோரியுள்ளதாகவும்,

காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு பெற்றோர் சார்பாக சட்ட உதவிகளை வழங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும்,

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சட்ட ஆலோசனை உட்பட சட்டத்தரணிகள் போன்ற உதவிகளையும் செய்ய தமது கட்சி தயாராக உள்ளதாகவும் அங்கு தெரிவித்த அவர்,

88, 89ஆம் ஆண்டுகளில் கொல்லப்பட்டோர் தொடர்பாக இது வரை 22 ஆயிரம் புகார்கள் தமக்கு கிடைத்திருப்பதாகவும், ஆனால் 1 இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டிருப்பார்கள் என்று தாம் எண்ணுவதாகவும். யுத்தத்தை தாம் நிராகரிப்பதாகவும் குறிப்பிட்டார் (இ-4)

## சங்கத்தினால் வீடு கொள்வனவு

தென்மராட்சி, பெப் 8

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தினர் தமது அலுவலகத் தேவைக்கென, 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீடொன்றினை கொள்வனவு செய்துள்ளதாக சங்கத் தலைவர் சி. பூபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (இ-11-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். விஞ்ஞான சங்கம் நடத்தும் ''சுகவாழ்வு வாய் சுகாதாரம்'' கருத்தரங்கு ஒன்று, இன்று புதன்கிழமை மாலை 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெறும். (இ-17)

## தீவுப்பகுதி இடம் பெயர்ந்தோருக்கு அவ்வப்பகுதி பிரதேச செயலர் மூலம் நிவாரணம்

தீவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு அவ்வப்பகுதி பிரதேச செயலர்கள் மூலமாகவே தற்போது நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது

முன்னர் வேலணை ஊர்காவற்றுறை. பிரதேச செயலர்கள் மூலமாகவே இந்த அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

இடம்பெயர்ந்த தீவுப் பகுதி மக்கள் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தங்கியிருப்பதால் அவ்வப்பகுதி பிரதேச செயலர் மூலமாக இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை வழங்க முடிவு செய்யப்பட்டது. [இ-17]

# தபால்மா அதிபரை வேலை நீக்கம் செய்ய தொழிற் சங்கம் கோரிக்கை

கொழும்பு, பெப். 8

''தபால்மா அதிபரை வேலை நீக்கம் செய்ய வேண்டும் அன்றேல் வேலை நிறுத்தத்தில் குதிப்போம்''

தபால் ஊழியர் சங்கம் மேற்கண்டவாறு தொலைத்தொடர்பு மற்றும் அஞ்சல் அமைச்சுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தபால்மா அதிபரை உடனடியாக வேலையில் இருந்து நீக்க வேண்டும் என்றும்—

அப்படி அவர் பதவி நீக்கப்படாவிட்டால் தாம் வேலை நிறுத்தத்தில் இறங்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும்—

தபால் ஊழியர் சங்கம் அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மீன்பிடி வலைகளுக்கு கொழும்பில் கிராக்கி

யாழ்ப்பாணம், பெப். 8

கொழும்பில் மீன்பிடி வலைகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

வடபகுதியில் இருந்து மீனவர்கள் பலர் கொழும்பு சென்று வலைகளை கொள்முதல் செய்து வருகின்றனர்

வடபகுதியில் மீன்பிடி தடை பகல் வேளைகளில் தளர்த்தப்பட்டிருப்பதால்கூடுதலான மீனவர்கள் மீன்பிடித் தொழில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-17)

# பர்மிய ராணுவ ஆட்சியாளர்களுக்கெதிராக கரென் பிரிவினைவாதிகள் நடத்தும் போராட்டம்

தற்போது மியான்மர் [Myanmar] என்று அழைக்கப்படும் பர்மாவில் பர்மிய ராணுவம் கடந்த வாரம் நடத்திய பெரிய தாக்குதல் ஒன்றில் கரென் [Karen] பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்களுக்கு தோல்வி ஏற்பட்டிருக்கிறது.

தாய்லாந்து எல்லைக்குச் சமீபமாக மனெர்பிலோ [Maner Plow] என்ற இடத்தில் உள்ள கரென் கிளர்ச்சியாளர்களின் தலைமையகத்தை பர்மிய ராணுவம் கைப்பற்றி உள்ளது.

21 வருட காலமாக கரென் கிளர்ச்சியாளர்களின் கோட்டையாக இருந்து வந்தது மனெர்பிலோ நகரம்.

அது அரச படைகளிடம் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து, கரென் கிளர்ச்சியாளர்கள் பெரும் அளவில் தாய்லாந்துக்குள் தப்பிச் சென்றுள்ளனர்.

மனெர்பிலோ நகரைப் பாதுகாப்பதற்கு தம்மால் சண்டையிட முடியும் என்றும் —

ஆனால் பெரும் அழிவைத் தவிர்ப்பதற்காகவே அந்த நகரைக் கைவிட்டுச் சென்றதாகவும் கரென் கிளர்ச்சித் தலைவர் கொம்மாண்டர் ஜெனரல் போமையா [Bo Mya] தெரிவிக்கிறார்.

பர்மிய ராணுவம் கடந்த வாரம் தாக்குதல் நடத்திய போது மனெர்பிலோ நகரை சுமார் ஆயிரம் கரென் போராளிகள் பாதுகாத்து வந்தனர். பர்மிய ராணுவத்தின் தாக்குதலின் போது இவர்களும் இவர்களுக்கு ஆதரவான ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட குடி மக்களும் தாய்லாந்து எல்லைக்குள் சென்றனர்.

46 வருடமாக நடைபெற்று வரும் தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று கரென் பிரிவினைவாத கிளர்ச்சித் தலைவர் போமையா அறிவித்துள்ளார்.

### அரசியலில் ராணுவத்தின் தலையீடு

பர்மா 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.

பர்மா சுதந்திரம் அடைந்த நாள் முதல் பர்மிய அரசியலில் ராணுவம் பெரிய சக்தியாக இருந்து வருகிறது.

தற்போது பர்மிய ஆட்சித் தலைவராக இருப்பவர் லெப்டினன்ட் ஜெனரல் கின்நியன்ட் (Khin Nyunt)

எதிர்க்கட்சித் தலைவியான ஒங் சான் சூகி (Aung San Suu Kyi) இன்னமும் தடுப்புக் காவலில் இருந்து வருகிறார்.

நாட்டை நிர்வகிக்கும் ராணுவ ஆட்சி பீடம் ''சட்டம், ஒழுங்கை நிர்வகிக்கும் சவுன்ஸில்'' (State Law and Order Restoration Council) என்று அழைக்கபபடுகிறது

பர்மாவில் ஜனநாயக வாதிகள் தேர்தல் நடத்தக்கோரி நடத்திய போராட்டம் 1988 இல் மிகவும் மோசமான முறையில் ராணுவத்தினரால் அடக்கப்பட்டது. பலர் கொல்லப்பட்டனர்.

1990 ஆம் ஆண்டில் தேர்தல் நடத்த ராணுவ ஆட்சியாளர்கள் இணங்கினர்.

அத்தேர்தலில் மொத்தம் 485 ஆசனங்களில் 392 ஆசனங்களை ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி கைப்பற்றியது.

தேர்தலை செல்லுபடியற்றதாக்கிய பர்மிய ராணுவ ஆட்சியாளர்கள் பெரும்பாலும் முழு எதிர்க்கட்சித் தலைவர்களையுமே சிறையில் அடைத்தனர்.

ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சியின் தலைவி ஒங் சான் சூகி சிறையில் இருந்தவாறே 1991இல் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

### சுதந்திரத்தின பின் 3ஆவது அரசமைப்பு

பர்மிய ராணுவ ஆட்சியாளர்கள் பர்மாவில் புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்றை உருவாக்கவும் இந்த ஆண்டு நடுப்பகுதியில் தேர்தலை நடத்தவும் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் சிறையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்க்கும் விதத்திலேயே புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பர்மா சுதந்திரம் அடைந்த காலம் முதல் அதன் எல்லைப் புறங்களில் சிறுபான்மை இனத்தவர்களின் கிளர்ச்சிகளை எதிர்நோக்கி வருகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக இவ்வாறான 13 இயக்கங்களுடன் பர்மிய ராணுவ அரசு உடன்பாடு ஒன்றுக்கு வந்துள்ளது. யுத்த நிறுத்தமும் அமுலில் இருந்து வருகிறது.

பர்மிய ராணுவ அரசுடன் இணக்கத்துக்கு வராத பிரதான இயக்கங்களில் கரென் இயக்கமும் ஒன்றாகும்

கரென் தேசிய யூனியன் [Karen National Union] என்பதே கரென் இயக்கத்தின் முழுப்பெயர்.

இந்த இயக்கம் கடந்த டிசம்பரில் பிளவுபடுத்திவிட்டதாகவும் கரென் [illegible] பெயரில் புதிய இயக்கம் ஒன்று [illegible] தாகவும் பர்மிய ராணுவ ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### தாய்லாந்து பர்மிய உறவு

கரென் பிரிவினைவாதிகளின் போராட்டம் தாய்லாந்து — பர்மிய உறவைப் பாதிக்கிறது.

கரென் போராளிகள் தாய்லாந்து எல்லையில் பெரும் அளவில் நிலை கொண்டிருப்பதும், பர்மிய ராணுவம் தாக்கும்போது தாய்லாந்துக்குள் தப்பிச் செல்வதுமே இதற்குக் காரணம்.

பர்மிய அரசாங்கத்தைப் போன்று தாய்லாந்து அரசாங்கமும் இதே போன்ற பிரச்சினையை எதிர்நோக்கி உள்ளது. தாய்லாந்து — மலேசிய எல்லையில் பட்டானியர்கள் கூடிய சுயாட்சி கோரிப் போராடி வருகின்றனர்.

பர்மிய ராணுவ அரசு மத்தியில் எதிர்க்கட்சிகளுடன் போராட்டம் நடத்தி வருகிறது. எல்லைகளில் இனரீதியான பிரிவினைவாத இயக்கங்களுடன் போராடுகிறது.

பர்மா தொடர்ந்தும் அரசியல் குழப்ப நிலையையே நோக்கிச் செல்லும் அறிகுறிகளே தென்படுகின்றன.

## அகதிகள் வருகையை கட்டுப்படுத்த கனடா முடிவு

கொழும்பு, பெப். 8

இலங்கையா உட்பட ஆசிய நாட்டவர்களின் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த கனடா முடிவு செய்துள்ளது

தற்போது தங்கி ஆவணங்கள் இன்றிச் செல்லுவோர் பற்றிய விசாரணைகள்.

அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்தவர்கள் சம்பந்தமான விசாரணைகள்— முடிவடைய பல மாதங்கள் செல்கின்றன.

இந்த இடைக்காலப்பகுதிக்குள் சட்ட அறிஞர்களைச் சந்திப்பது உட்பட பல நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

கனேடிய அரசு தற்போது மேற்கொண்டுள்ள புதிய நடவடிக்கையின் படி, போதிய ஆவணங்கள் மற்றும் அனுமதி இன்றிச் செல்லுவோர் சம்பந்தமான விசாரணை ஒரு சில நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு அவர்கள் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

அதேசமயம் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்துள்ளவர்களின் விண்ணப்பங்களும் மிகக் குறுகிய காலத்துக்குள் பரிசிலனை செய்யப்பட்டு முடிவு அறிவிக்கப்பட உள்ளது. (இ)

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

யாழ்ப்பாணம், பெப். 8

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக திரு. சு. டிவகலால நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தமது கடமைகளை சென்ற வெள்ளிக்கிழமை மாகாண சபையில் பொறுப்பேற்றார்.

முன்னர் இவர் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றி இருந்தது குறிப்பிடத்தக்கது. [இ-4]

## விசர் நாய் கொல்லப்பட்டது

வடமராட்சி, பெப். 8

ஒரு மாணவன் ஓர் ஆசிரியர் உட்பட நால்வரைக் கடித்த விசர் நாய் ஒன்றை பொதுமக்கள் தேடிப்பிடித்து அடித்துக் கொன்றனர்.

இச் சம்பவம் அண்மையில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெற்றது. [இ-173-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 6—7½ H P. இங்கிலிஸ் இம்பீரியல் என்ஜின் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ''கரன் மில்'', பொற்பதி றோட், கொக்குவில். [7892]

விசேட அற்றோனித்தத்துவம் வகை, வெற்று மாத அட்டவணை, வார அட்டவணை, சொற்பபிரதிகளே வந்துள்ளன. ஏ. சி. எஸ். 90, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். (7894)

## விற்பனையாகின்றன

எல்லாவித டயறிவகைகள் கொழும்பு விலையில் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு. பிற்மன், மோட்டார் புக் பிற்மன் டைப்பிரைட்டிங் புக் வியாபாரிகள் தமது விலாசம் அச்சடித்துக் கொடுப்பதற்குரிய கலண்டர் புதியவை. திருமண அழைப்பிதழ் கார்ட் அச்சிடுவதற்கு, பிறந்த நாள் வாழ்த்து மடல் மலிவு விலையில்; ஸ்ரீகாந்த் பத்தகசாலை யாழ்., மக்மிலன் புத்தகசாலை யாழ். [சி-358]

## மணமகன் தேவை

யாழ். இந்து. பெற்றோர் அவுஸ்திரேலியாவில் வதிவிடம் பெற்ற 27வயது நிரம்பிய செவ்வாய் தோஷமுள்ள Dip in Accounta cy முடித்த மகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல 756, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35054]

## மணப்பெண் தேவை

கந்தர்மடத்தில் பிறந்த மகம் நட்சத்திரம், 12இல் செவ்வாயுள்ள, 32 வயது, அழகும் குணமுமுள்ள இந்து டாக்டருக்கு எக்கவுண்டன், எஞ்ஜினியர், டாக்டர் மணமகள் தேவை. பிற்பகல் 2 மணிக்கு மேல் நேரில் தொடர்பு கொள்ளவும். சு. சதிரித்தம்பி, முன்னாள் நாரந்தனை கிராம சபைத் தலைவர், சமாதான நீதிவான், இல. 16/5, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [35083]

## தேவை

எமது சங்கத்திற்கு பால் வியாபாரத்திற்காக நல்லூர் கோயிலை அண்டிய பகுதியில் 75சதுர அடிக்குக் குறையாத ஓர் கட்டடம் வாடகைக்குத் தேவை. கட்டடம் தரக்கூடியவர்கள் கீழ்க்காண் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி-530]

## மணமகள் தேவை

கிறிஸ்தவ, 35 வயது, கொழும்பில் மிருக வைத்தியராக (Vetenary Surgeon) கடமையாற்றும் குடிப்பழக்கமற்ற மணமகனுக்கு நன்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. வெளிநாட்டவர்களும் விரும்பத்தக்கது கடித மூலம் தொடர்பு: இல. 757, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (35084)

## ரி. வி. டெக திருத்துநல்

சகல றேடியோக்களையும், ரி. வி. டெக், எல்லாவித மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], வானவில் அருகில் யாழ்ப்பாணம், கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-362]

## தவறிவிட்டது

கண்டிக்குளிக்கும், வெலிங்டன் சந்திக்கும் இடையில் 5-2-95 சைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி அரியரட்ணம், பாரத் லேன், மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [35078]

## குடிநீர் கொள்கலன்கள்

பாடசாலைகளில் தாகசாந்திக்கான குடிநீர் கொள்கலன்கள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் மில்க்வைற் சோப் மேலுறை/சலவைத் தூள்வெற்றுப் பக்கற தந்து பெற்றுக் கொள்ளலாம். 'மில்க்வைற்'. (சி-529)

---

இளங்கலைஞர் மன்றம்

# 15 ஆவது இசை விழா

காலம்: 11 - 02 - 95 — 25 - 02 - 95
(15 தினங்கள்)

நேரம்: தினமும் பி.ப 4 மணி தொடக்கம்
இரவு 10 மணிவரை

இடம்: மன்றக் கலாமண்டபம்

ஈழத்தின் முன்னணிக் கலைஞர்களும் இளங்கலைஞர்களும் வழங்கும் மங்கள இசை, கூட்டிசை, வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, பரதநாட்டியம், நாட்டியநாடகம், நவீன நாடகம், வில்லிசை முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இசை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

[C/518] — மேற்படி மன்றத்தினர்

---

# 2-ம் ஆண்டு நினைவு



பிறப்பு: 14 — 04 — 1910

இறப்பு: 08 — 02 — 1993

அமரர்

**கந்தையா கனகையா**

(முன்னாள் முகாமையாளர் மனோகரா தியேட்டர்)

என்றும் உங்கள் நினைவோடு இருக்கும்;

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

136, கண்டி வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [35077]

---

## யாருடையது

கல்வியங்காடு சந்திக்கு அண்மையில் கைக்கின் ஒன்று கண்டெடுக்கப்பட்டு, கல்வியங்காடு வர்த்தக பாதுகாப்பு சேவையில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். [35082]

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

போதனாசிரியர் (கணிதமும் புள்ளி விவரவியலும்) பதவிக்காக பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1995 மார்ச் 1ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்;

**சம்பள அளவுத்திட்டம்:**
போதனாசிரியர்
ரூபா 4 420/- (நிலையானது) மாதமொன்றுக்கு.

இத்துடன்,

நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றுப்படியாக 1995 ஜூன் 30ஆம் திகதி வரை சம்பளத்தில் 25% சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் திகதி 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

**தகைமைகள்:**
போதனாசிரியர்;

பட்டத்தில் பொருத்தமான பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி.

1994 இல் நடைபெற்ற இறுதித் தேர்வின் பெறுபேறுகளுக்காக காத்திருப்போரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23X10 ச மீ., அளவுடைய ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு-13 ஆடுப்பட்டித்தெரு, 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் –
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995-02-01. (சி-528)

---

கொழும்புத்துறை ஆத்தியம்பதி
அருள்மிகு
ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் கோயில்

# 2ஆம் நாள் திருவிழா

08 — 02 — 1995

கொழும்புத்துறை ஆத்திபுலம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் 07 – 02 – 1995 தொடக்கம் தொடர்ந்து பத்திநுத்தினங்கள் நடைபெறும் மஹோற்சவ வைபவத்தில் இரண்டாம் நாள் சிறப்பு நிகழ்ச்சியாக இன்று இரவு 7-30 மணிக்கு (08 – 02 – 1995) தமிழீழத்தின் பிரபல்ய நாதஸ்வர தவில் மேதைகள் ஒன்றாக தோன்றும் நாதஸ்வர தவில் கச்சேரி நடைபெற உள்ளதென்பதை மெய்யடியார்களிற்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தேவஸ்தான ஆதீன நாதஸ்வர கலைஞர் — தவில்

| | |
|---|---|
| நாதஸ்வர வித்தஜோதி | K.T. சுந்தரலிங்கம் |
| K.T. சுப்பிரமணியம் | தவில் வித்வமணி |
| N. ரஜெஸ்வரன் (ராஜன்) | K கணேசதாசன் |

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| அளவையூர் | இணுவையூர் |
| நாதஸ்வரகான கலாநிதி | லய நாத ரத்தினம் |
| N.K. பத்மநாதன் | K. நித்தியானந்தம் |
| கோண்டாவில் | T. உதயசங்கர் |
| நாதஸ்வர இரட்டையர்கள் | நாச்சிமார் கோயிலடி |
| V.K. பஞ்சமூர்த்தி | K. G. சிவகுமார் |
| நாகஸ்வர நாதகானவேணு | தவில் வித்வான் |
| S S. சிதம்பரநாதன் | அரியாலையூர் |
| இலங்கை வானொலி புகழ் | N இராமநாதன் |
| P.S. பிச்சையப்பாபிள்ளை | R யசோதரன் |
| லய நாத வித்தகர்கள் | V. சபேசன் |
| P. ரவி ரஜி சகோதரர்கள் | |
| நாதஸ்வரவித்வான் | |
| V.K. ராமதாஸ் | |
| A S. செல்வக்குமார் | |
| M சிவசுப்பிரமணியம் | |
| S கண்ணன் | |
| S.V. வரதன் | |

இங்ஙனம்:
2ஆம் நாள் உபயகாரர்கள்.

[சி-527]

---

அரியாலை

# 76 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 1995

வடமாகாண ரீதியில்

| | |
|---|---|
| எறிபந்தாட்டம் (மென்பந்து) 7 பேர் 12 ஓவர் | ரூபா 50/- |
| கரபந்தாட்டம் செற் அப் | ரூபா 50/- |
| வலைபந்தாட்டம் பெண்கள் | ரூபா 25/- |

விண்ணப்பம் முடிவு: 12 - 02 - 1995

சரித்திர நாடகப் போட்டி
55—60 நிமிடம் ரூபா 50/-
விண்ணப்ப முடிவு: 20 - 03 - 1995

தலைமைக்காரியாலயம்:
474 கண்டி வீதி, சரஸ்வதி ச ச நிலையம்
அரியாலை.


தொடர்பு:
சு. குருபரன் (விளையாட்டு)
அ சந்திரகுமார் (கலை)

ச. உருத்திரேஸ்வரன்
பொதுச் செயலாளர்

(35085)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**செல்லத்துரை உலகநாதன் J.P.**

(பலாலி தெற்கு - வயாவிளான்)

மனிதகுல மாணிக்கம்!
தலைமுறை காணாத் தலைமகன்!!

சேவையால் உயர்ந்த உத்தமர் உலகர்
தேவைகளைத் தேடிச்சென்று தீர்த்த பெருமகன்
சமூகவிடுதலைக்குச் சளைக்காது உழைத்த சொல்வீரர்
இவர் நினைவுகளைக் குரும்பசிட்டி
என்றும் தாங்கி நிற்கும்.

குரும்பசிட்டி கிராமாபிவிருத்திச் சங்கம்

(35092)

---

யா/கண்டிக்குளி, கொய்யாத்தோட்டம்
புதுவீதி
ஸ்ரீஞான செல்வ விநாயகர் ஆலய

# பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான பவ வருடம் தை மாதம் 27 ஆம் நாள் (10 – 02 – 95) வெள்ளிக்கிழமை மிருகசீரஷ நட்சத்திரமும், மீனலக்னமும் கூடிய காலை 10.30 மணிக்கும் 11 00 மணிக்கும் இடைப்பட்ட சுப வேளையில், பாலஸ்தாபன கும்ப அபிஷேகம் நடைபெறும். எனவே அடியார்கள் அன்றைய தினம் வந்து பங்குகொண்டு இறைவனின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

[குறிப்பு:- காலை 6.00 மணி தொடக்கம் கிருகைகள் ஆரம்பம்.]

ஞான செல்வ விநாயகர் ஆலய
பரிபாலன சபை,
கொய்யாத்தோட்டம்.

[35090]

---

# வரவேற்புபசாரம்

நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியர்
**செல்வன் பா. உதயகுமார்**
அவர்களுக்கும்

ஊரெழு கணேசா வித்தியாசாலை ஆசிரியை
**செல்வி அ. மதினி**
அவர்களுக்கும்

அண்மையில் இனிது நிறைவேறிய திருமணத்தை முன்னிட்டு

09 - 02 - 95 வியாழக்கிழமை
பிற்பகல் மணி 3 00 — 7-00வரை

வரவேற்புபசாரம் நடைபெறும்.

நண்பர்கள், கலை இலக்கிய அன்பர்கள் பணிவன்பாக அழைக்கப்படுகின்றார்கள்

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி வேல் அமுதலிங்கம்
(வேல் அமுதன்)
(மணமகளின் பெற்றோர்)

ஆண்டாண்டு, பல்லாண்டு
மணமக்கள் இனிது வாழ

**மதி அக்கடமி,
மகவம் அமைப்புக்கள்**

மனமார வாழ்த்துகின்றன!

(35005)

---

# 31ஆம் நாள் நினைவு



**திருமதி குழந்தைவேலு முத்தம்மா**

(திகிரிவளவு - புலோலி கிழக்கு)

கண்ணில்: 02-09-1917

காற்றில்: 08-01-1995

திண்ணிய நெஞ்சுடன் தெரிந்த அறிவுடன்
எண்ணிய முடித்து எம்மை வாழ்த்தி
புண்ணியம்பல இயற்றி விண்ணில் புகுந்தாய்
அங்கு வீடு பெற நீடு வாழ்க!

குடும்பத்தினர்
சட்டத்தரணிகள்
ச. இராமநாதன் (மருமகன்)
கு. விஜேந்திரா (மகன்)
கு. இராஜகுலேந்திரா (மகன்)

பருத்தித்துறை. (8229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அவகாசம் உண்டு

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்பது சந்திரிகா அரசாங்கத்தின் நோக்கம். கடினமான பாதையாக இருப்பினும் அந்த வழியிலேயே சென்று ஐந்து தசாப்தங்களாக தீர்க்கப்படாமல் நீளும் இன விவகாரத்துக்கு முடிவுகண்டுவிட வேண்டும் என்பதில் தாம் உறுதியாகவும் நம்பிக்கையாகவும் உள்ளதாக ஜனாதிபதி அடிக்கடி கூறி வருகிறார்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படவேண்டுமானால், பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக, அரசாங்கம் தனது சொந்தத் தீர்வு ஒன்றை முன்வைப்பது முக்கியமானதாகும். அவ்வாறு ஒரு தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைத்தாலே அடுத்த தரப்பினரும் அதனை ஆராய்ந்து உகந்த தீர்வை எட்ட முடியும்.

கடந்த பதினேழு வருடங்களாக இனப்பிரச்சினை சம்பந்தமாக நடத்திய மாநாடுகள், பேச்சுவார்த்தைகளில் ஐ.தே. கட்சி அரசாங்கம் தனது சொந்த யோசனையை முன் வைத்ததில்லை. எல்லோருமாகச் சேர்ந்து கருத்தொற்றுமைக்கு வருவோம் என்று கூறிக் கூடிக் குழம்பியது தான் மிச்சம்.

இந்த நிலைமை மீண்டும் உருவாகாமல் இருப்பதற்கு, இப்போது ஆரம்பமாகியுள்ள பேச்சுவார்த்தைகளின் போது அரசு தனது சொந்தத் தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டியது அவசியம். இதனை உணர்ந்து தனது தீர்வு யோசனையைத் தயாரிப்பதில் அரசு ஈடுபட்டிருப்பது நல்ல அறிகுறி.

அரசாங்கத்தின் உத்தேச தீர்வுத் திட்டம் அடுத்தமாத நடுப்பகுதியில் வெளியிடப்பட்டுவிடும் என்று அமைச்சர் இந்திகா குணவர்த்தனா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆனால் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகளில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விவகாரத்தை ஆராய்வதற்கு அரசு இப்போதே அவசரப்படுகிறது!

தமிழ் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளை முதலில் ஆராய்ந்து செயற்படுத்திக் கொண்டு, அதன் பின்னர் அரசியல் விவகாரத்தைப் பேசுவது என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. முதற் சுற்றுப் பேச்சின் போது அரசாங்கத் தரப்பும் இதற்கு இணங்கியது.

ஆனால் இப்போது அந்த நிலையிலிருந்து சறுக்கி அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்காமலேயே, அரைகுறையில் விட்டுவிட்டு, அரசியல் விவகாரத்தைப் பேச வேண்டும் என்று அரசு விரும்புகிறது.

இத்தனைக்கும், அரசியல் விவகாரத்தை ஆராய்வதற்கு அடிப்படையாகத் தேவைப்படும் அரசின் தீர்வு யோசனை இன்னும் தயாரில்லை. அரசாங்கத்தின் திட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் அதனை அடிப்படையாக வைத்து அரசியல் பேச்சைத் தொடங்குவதும்—

அதற்கு முன்னர் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதான செயற்பாடுகளைத் துரிதமாகச் செய்வதுமே— மிகமிகப் பொருத்தமாக இருக்கும்.

அரசு மனதுவைத்தால், தனது தீர்வு யோசனை தயாராகும் மார்ச் நடுப்பகுதிக்கு முன்னர், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போதிய அவகாசம் உண்டு.

அரசியல் விவகாரம் குறித்துப் பேசுவதற்கு முன்னர், இப்போதைய மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக மாற்றுவதற்கான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம். குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதையைத்திறந்துவிடலாம். மின்சாரம் மற்றும் சில அடிப்படைத் தேவைகளை வடபகுதி மக்களுக்கு வழங்கலாம்.

அப்போது ஒரு சுமுகமான நிலை தோன்றும். அந்த வேளையில் அரசியல் விவகாரத்தைப் பேசத் தொடங்கும் போது வெற்றி கிட்டுவதற்கான வாய்ப்புகளும் சாத்தியமும் அதிகரிக்கும். அரசு இதனை உணருமா?

# இனப்பிரச்சினையில் தீர்வு ஏற்படும்: காங்கிரஸ் உறுப்பினர் நம்பிக்கை

வாஷிங்டன், பெப்.8

ஸ்ரீலங்காவில் இன மோதலுக்கு முடிவு கட்டுவதற்கான சமாதான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் என்று தாம் நம்புவதாக அமெரிக்க காங்கிரஸைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் கூறியுள்ளனர்.

தற்பொழுது, கைத்தொழில் அமைச்சர் ச.வி. குணரத்னவுடன் அமெரிக்கா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பற்றி அமெரிக்கா காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினார்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் துணிகரமான சமாதான முயற்சியைப் பாராட்டியதுடன் அதற்கு தமது உறுதியான ஆதரவையும் தெரிவித்தார்கள்.

அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அவர்கள் பூரணமாக ஆதரவு அளித்ததுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான முறையில் எதிரொலிக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டனர்.

நியூயோர்க் காங்கிரஸ் உறுப்பினர் பெஞ்சமின் ஜில்மன் இரண்டு ஸ்ரீலங்கா அமைச்சர்களுக்கும் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தார்.

கமிட்டியின் தலைமைச் சிறுபான்மை உறுப்பினரான லீ ஹமில்டன், ஆசியா பசிபிக் ஆகியவற்றுக்கான உப கமிட்டியின் தலைவர் டவுச் பெறுற்றர், காங்கிரஸ் உறுப்பினர்கள் அக்கெர்மன், டனா றொப்றபார்ச்சர், ஜே கிம், ஜேம்ஸ்பி, மோறன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இவர்கள் குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளையும் சேர்ந்தவர்கள்.

[இ-க]

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சாவகச்சேரியிலிருந்து மின் இயந்திரம்

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ். போதனா வைத்தியசாலையின் அன்றாட மின் தேவைகளை ஓரளவுக்காவது சீர்ப்படுத்தும் நோக்கில், சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து 80 கே. டபிள்யூ மின் இயந்திரம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குச் சொந்தமான இந்த இயந்திரம், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்க தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கி வந்த 85 கே. டபிள்யூ இயந்திரம் பழுதடைந்ததைத் தொடர்ந்தே இந்த இயந்திரம் தருவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கி வரும் 200 கே. டபிள்யூ இயந்திரங்கள் இரண்டும் தொடர்ச்சியாக இயங்குவதால் அவை விரைவில் பழுதடையும் நிலையை அடைவதைத் தவிர்ப்பதற்கும்—

எரிபொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும்— இந்த 80 கே. டபிள்யூ இயந்திரம் உதவும் என்று கூறப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு என கொண்டு வரப்பட்ட இந்த 80 கே. டபிள்யூ இயந்திரம், எரிபொருள்வழங்கப்படாமையால் இதுவரை இயங்காமல் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-15-117-5)

## விதைகள், மரக்கன்றுகள் விநியோகம்

வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேசத்திலுள்ள விதவைகளுக்கு, வீட்டுத் தோட்டம் செய்வதற்கான விதைகளும், மரக்கன்றுகளும் கட்டுடை புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

வீட்டுத்தோட்டம் செய்வதனை ஊக்குவிக்கும் இந்நடவடிக்கைகள் ஒவ்வொரு கிராம சேவையாளரினதும் நேரடிக் கவனிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

[இ-90-5]

## பென்சன் நடைமுறையில் ஏற்றதாழ்வை நீக்க முடிவு

கொழும்பு, பெப். 7

தற்போது நடைமுறையிலுள்ள பென்சன் கொடுப்பனவில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்க அமைச்சரவை முடிவு எடுத்துள்ளது.

இதுவரை காலமும் 20 - 29 வருட சேவையை பூர்த்தி செய்து ஓய்வு பெறுவோருக்கு 80 வீத பென்சனும், 30 வருட சேவையைப் பூர்த்தி செய்தோருக்கு 90 வீத பென்சனும் வழங்கப்பட்டு வந்தது இதனால் பல அரச ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்திற் கொண்டு இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் வகையில் பின்வருமாறு பென்சன் கொடுப்பனவுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| சேவைக் காலம் | பென்சன் விகிதம் |
|---|---|
| 20 வருடம் | — 80% |
| 21 " | — 81% |
| 22 " | — 82% |
| 23 " | — 83% |
| 24 " | — 84% |
| 25 " | — 85% |
| 26 " | — 86% |
| 27 " | — 87% |
| 28 " | — 88% |
| 29 " | — 89% |
| 30 " | — 90% |

(ஐ-5)

## வடமராட்சியில் மீனின் விலை அதிகரிப்பு

வடமராட்சி, பெப். 8

வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மீனின் விலை தற்போது சிறிது அதிகரித்துள்ளது.

இப்பகுதி கடலில் மீன்பாடு வெகுவாகக் குறைந்துள்ளதாலேயே மீனின் விலை அதிகரித்துள்ளது.

இதே வேளை சில வாரங்களுக்கு முன்னர் மீன்பாடு அதிகரிப்பினால் பிடிக்கப்பட்ட பெருமளவு மீன் வகைகள் கருவாடு ஆக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டு வருகிறது. (ஒ-173)

# பூநகரியிலிருந்து ராணுவம் வெளியேறி பாதை திறக்க அனுமதிக்க வேண்டும்

## தட களப் போட்டி விழாவில் இளம்பரிதி உரை

யாழ்ப்பாணம், பெப். 8

பாதை விவகாரத்தில் பூநகரியில் இருந்து இராணுவம் முற்றாக வெளியேறி பாதையைத் திறக்க இடமளிக்க வேண்டும். இதுவே விடுதலைப் புலிகளின் இன்றைய நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாட்டை உலக நாடுகளும் சரியானது என கருத்துத் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்ட தட, களப் போட்டி விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். றோட்டறிக்கழகத்தின் ஆதரவுடன், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழா சென்ற சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கத் தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்ற இந்த தட, களப் போட்டி பரிசளிப்பில் திரு இளம்பரிதி தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

பூநகரியில் இருந்து இராணுவம் முற்றாக விலகிய ஒரு பாதையே நீடித்த சமாதானத்துக்கு வழி சமைக்கும். ஆனையிறவைத் திறந்தால் அங்கிருக்கின்ற இராணுவத்தினர் சோதனை என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது சேட்டை விடுவார்கள். இது மோதல் தவிர்ப்பு மீறப்படுவதற்கு சமனாகும்.

இன்று நாங்கள் அமைதிக்கான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். எமது மக்களின் அபிலாசைகள், அன்றாட பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு நாம் சுதந்திரமாக வாழ வழி கோலப்படல் வேண்டும்.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை மன்னாரில் படையினர் மீறியிருக்கிறார்கள்.

மட்டக்களப்பிலும் படையினரின் மீறல் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன. இத்தனைக்கும் மத்தியிலும் நாம் பலமான நிலையில் இருந்தும் ஏன் விட்டுக்கொடுக்கின்றோம் என்றால் நாம் ஒரு சரியான நிலையான சமாதானத்தை நோக்கி நகருகின்றோம்.

இன்று தமிழீழ தேசத்தின் மீது உலகின் பார்வை திருப்பப் படுவதோடு மட்டுமல்லாது பார்வை வலுவடைகிறது.

எமது தேசத்தின் வாழ்வை, அறிவை விருத்தி செய்யும் அமைப்பு மக்கள்.

இந்த தேசத்தினை அறிவுள்ளம் கொண்ட நாகரீக தேசமாக நிர்மாணிக்க மக்கள் போராட்டத்தில் இணைந்து செயற்பட்டு வருகிறார்கள், அந்த வகையில் இந்த தடகள விளையாட்டு விழவை நாம் பார்க்கிறோம்.

நாங்கள் சாதனை படைக்க விரும்புகிறோம் நெருக்கடிகளுக்குமத்தியில் தான் சரித்திரம் படைக்க முடியும். அந்த வகையில் [illegible] சரித்திரம் படைத்து உலகம் எங்களை கற்[illegible] வகையில் நாம் இருக்கின்றோம். விளையாட்டுத் துறை உலகளாவிய ரீதியில் வெற்றி பெறும் வீரர்களும் இருக்கிறார்கள். இந்த வீரர்களின் உந்துதலோடு விளையாட்டில் நாம் முன்னுக்கு வரலாம்.

இப்படி அவர் கூறினார்.

முன்னதாக விருந்தினர்கள் யாழ். மத்திய கல்லூரியில் இருந்து காவல்துறையினர் மற்றும் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

தேசியக் கொடியை திரு. இளம்பரிதியும் றோட்டறிக் கழகக் கொடியை யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஈ. சரவணபவனும், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கக் கொடியை கலாநிதி என். எதிர்வீரசிங்கமும், யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுக்கொடியை இக் குழுவின் இணைப்பாளர் திரு. சசியும் ஏற்றி வைத்தனர்.

இத்தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்களையும் கிண்ணங்களையும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி என். எதிர்வீரசிங்கம் வழங்கினர்.

கலாநிதி என். எதிர் வீரசிங்கம், யாழ். றோட்டறிக்கழகத் தலைவர் திரு ஈ. சரவணபவன் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

[illegible] அமெச்சூர் மெய்வல்லுநர் சங்[illegible] செயலாளர் [illegible] வழங்கினார். (இ-4)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப் 8

பாவை முத்திங்கள் அறிவு மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வல்வை அ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் கலாநிதி திரு. அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், நங்கூரம் ஆசிரியர் திரு. அ. ஐங்கர நேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கடற்புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த கவிஞர் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன், வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. விபுலன் ஆகியோர் சிறப்பு கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

கவிஞன் கையெழுத்துச் சஞ்சிகை காப்பாளர் திரு. பா. தங்கத் தமிழன் தலைமையுரையை நிகழ்த்துவார்.

இந் நிகழ்வில் தனிநடனம் குழுநடனம், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் விசேட நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளன. (இ-5)

## கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இவ் ஆண்டு கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 9 ஆம்திகதி வியாழக்கிழமை (9-2-95) காலை 9-30 மணிக்கு யாழ். மணிக்கூட்டு வீதியிலுள்ள மேற்படி பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

இதில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகுமென யாழ் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் அறிவித்துள்ளார். (ஒ-4)

## கல்வயலில் திருட்டு

தென்மராட்சி, பெப்.8

மாட்டுத் தொழுவத்தில் நோயுற்ற மாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் வீட்டினுள் புகுந்த திருடன் அறையொன்றில் வைக்கப்பட்டிருந்த பெறுமதி மிக்க தங்க நகைகளையும் பணத்தையும் திருடிச் சென்ற சம்பவம் அண்மையில் சாவகச்சேரி கல்வயலில் இடம் பெற்றது.

இத் திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-117)

## தேடுவாரற்ற நிலையில் வெங்காயப் பூ

வடமராட்சி பெப். 8

வடமராட்சிப் பகுதிகளில் இம்முறை வெங்காயம் அமோகமாக விளைந்ததைத் தொடர்ந்து, வெங்காயப் பூ தேடுவாரற்று வீதிகளிலும், குப்பைமேடுகளிலும் கொட்டப்படுகிறது. சில இடங்களில் ஆடு, மாடுகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. (இ-173-5)

## கடலில் விழுந்த வெள்ளைப் பூடு மூடைகள்

யாழ்ப்பாணம், பெப். 8

"குமண" கப்பலில் வந்து சேர்ந்த 25 மூடை வெள்ளைப் பூடு கடலில் விழுந்து நாசமாகியது.

பருத்தித்துறை துறை முகத்தில் கப்பலில் இருந்துகிறேயின் மூலம் இறக்கும் சமயமே வெள்ளைப் பூடு மூடைகள் கடலில் வீழ்ந்தன (இ 17)

## தொண்டா குடும்பத்தின் காசோலை

கொழும்பு, பெப். 8

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தொண்டமான் குடும்பத்தினர் ஏயர் லங்கா நிறுவனத்துக்கு வழங்கிய காசோலை ஒன்று வங்கியில் பணம் இல்லாததால் திரும்பியது.

இந்த 30 லட்சம் ரூபா தொகைக்கான காசோலை தொண்டமான் குடும்பத்தினர் ஏயர் லங்காவுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிப் பணத்தின் ஒரு பகுதியாக செலுத்தப்பட்டிருந்தது. (க)

# காஸாவில் துப்பாக்கிச்சூடு; இஸ்ரேல் வீரர் ஒருவர் பலி

புதுடில்லி, பெப். 8

பாலஸ்தீனியர்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள காஸா பகுதிக்கு வெளியே நேற்று அதிகாலை பெற்றோல் தாங்கி ஒன்றுக்கு காவலுக்கு நின்ற பாதுகாப்பு படையினர் மீது போராளிகள் சுட்டதில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். வேறு ஒருவர் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலுக்கு பல இயக்கங்கள் உரிமை கோரியுள்ள போதிலும், இஸ்லாமிய போராளிக் குழுவான ஹமஸ தனக்கும் இத்தாக்குதலுக்கும் சம்பந்தம் எதுவும் கிடையாது என அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுக்களை சீர்குலைக்க முயலும் பாலஸ்தீனியர்களின் வேலையே இது என பாலஸ்தீனியத் தலைவர் யாஸிர் அரபாத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், அண்மையில் இஸ்லாமியப் போராளிகள் நடத்திய தற்கொலை குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து 2 வாரங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பி. எல். ஓ.— இஸ்ரேலியப் பேச்சுக்கள் நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. (இ-5)

# ஐக்கிய இலங்கையை கட்டிஎழுப்புவதே என் பணி

## ரணில் விக்கிரமசிங்க உரை

கொழும்பு, பெப். 8

"இனமத பேதம் அற்ற சமத்துவமான ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்புவதே எனது பணியாகும். இந்தப் பணி வெற்றிகரமாக நிறைவேற நாட்டு மக்கள் அனைவரும் எனக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்."

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க கடந்த 29ஆம் திகதி அநுராதபுரத்தில் கட்சியின் புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்து உரையாற்றிய போது இவ்வாறு கூறினார். [க-4]

# கண்சிகிச்சை நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

மந்திகை ஆஸ்பத்திரியில் கண் கிளினிக்கிற்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் இதுவரை காலமும் இருந்து வந்த நெருக்கடியைக் குறைத்து மக்களின் சிரமங்களைக் குறைக்கும் நோக்குடன் ஏனைய பகுதிகளில் உள்ள சில வைத்தியசாலைகளிலும் கண் கிளினிக்கை, யாழ். ஆஸ்பத்திரியின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் கே. குகதாஸன் நடத்தி வருவது தெரிந்ததே.

தற்பொழுது மந்திகையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் குறைக்க பதிவுசெய்யும் நோயாளரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 17 ஆம் திகதியும், மார்ச் 3 ஆம் திகதியும் மந்திகையில் நடைபெறவுள்ள கண்கிளினிக்கிற்கு அதிக அளவு நோயாளர் பதிவு செய்துள்ளமையால் பதிவு செய்தோரைத் தவிர மேலதிகமாக எவரும் பார்வையிடப்படமாட்டார் எனவும்—

புதிதாகப் பதிவுசெய்ய விரும்புவோர் மார்ச் 4 ஆம் திகதிக்குப் பின்பே பதிவுசெய்யலாம் எனவும் — பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார். [இ-15]

## ப.நோ.கூ. சங்க புதிய கிளைகள்

பளை ப. நோ. கூ. சங்கத்தினர் இவ்வருடம் ரூபா மூன்று லட்சம் செலவில் மூன்று கிளைக்கடைகளை அமைக்கவுள்ளனர்.

# பாடசாலையில் முகாம்: ராணுவம் அகல மறுப்பு

## மட்டக்களப்பில் கல்வி பாதிப்பு!

மட்டக்களப்பு, பெப். 8

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனை பாடசாலையை விட்டு வெளியேற மறுத்து அங்கேயே நிலை கொண்டு விட்ட இராணுவத்தினரால் மட்டக்களப்பிலுள்ள தமிழ் கல்விச் சமூகம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

மொறக்கொட்டாஞ்சேனை பாடசாலையில் கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து இராணுவம் முகாம் அமைத்துள்ளது.

இராணுவ முகாமை பாடசாலையை விட்டு வேறு இடத்துக்கு அகற்றுமாறு பல்வேறு தரப்பினராலும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை இராணுவம் அலட்சியப்படுத்தி, புறக்கணித்து விட்டது. பாடசாலையை விட்டு முகாமை அகற்றவும் மறுத்து விட்டது.

இப்பாடசாலையில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் எதுவித அத்தியாவசிய வசதிகளுமற்ற நிலையில் தனியார் வீடுகளிலும், கட்டடங்களிலும் பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் கல்வி கற்று வருகின்றனர். (இ-4-5)

## மருதனார்மடம் பகுதியில்

# மிகச் சீர்கெட்ட வீதிகளால் நாள் தவறாது விபத்துக்கள்

தெல்லிப்பழை, பெப். 8

மருதனார்மடம் பிரதான வீதி, மருதனார்மடம் மானிப்பாய் வீதி, மருதனார்மடம் கோப்பாய் வீதி ஆகியன மிகவும் சீர்கெட்ட நிலையில் இருப்பதால் அவ் வீதிகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

குண்டும் குழியுமாகக் காணப்படும் இவ் வீதிகள், அண்மைக் காலங்களில் பெய்து வரும் மழையினால் மேலும் மோசமடைந்துள்ளன.

மருதனார்மடத்துக்கு அண்மையில் பல பாடசாலைகள் இயங்குவதாலும், பிரதான போக்குவரத்து வீதியாகக் காணப்படுவதாலும் இவ்வீதிகளில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்ததாக இருக்கிறது.

பாடசாலை மாணவர்களின் சைக்கிள்களாலும், ஏனைய போக்குவரத்து வாகனங்களாலும் நிறைந்து காணப்படும் இவ்வீதிகளில் விபத்துக்கள் சர்வ சாதாரணமாக—நாள் தவறாமல் இடம் பெற்று வருகின்றன (ஒ-68-5)

# மீன்பிடித்துறைஅபிவிருத்தி செயலகத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப் 8

யாழ். மாவட்ட மீன்பிடித்துறை அபிவிருத்தி தொடர்பாக மாதாந்தம் யாழ்.செயலகத்தில் தனியான கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது

யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மீன்பிடித் திணைக்களம் சம்பந்தப்பட்ட விடயங்கள் மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே ஆராயப்பட்டு வந்தது.

இதன்படி யாழ் மாவட்ட மீன்பிடித்துறை ஒருங்கிணைப்புக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி ஆலயத்தின் மண்டபம் இடிந்து வீழ்ந்தது

யாழ்ப்பாணம், பெப். 8
தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய முன் மண்டபம் இடிந்து வீழ்ந்தது.

இராணுவ நடவடிக்கைகளின்போது ஓரளவு சேதமடைந்திருந்த இந்த ஆலயத்தில் தற்போது திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருத்த வேலை செய்து கொண்டிருந்த வேளையே அந்த மண்டபம் திடீரென சரிந்து விழுந்தது.


கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது கச்சான் விற்றுக்கொண்டிருந்த சிறுவன் ஒருவன் மாத்திரமே சிறுகாயமடைந்தார்.

அதிஷ்டவசமாக மக்கள் கூட்டம் மண்டபத்திற்கு வெளியே இருந்தமையால் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை. (ஒ-15)


எடிசன் அக்கடமி
(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
With
GRAMMAR
By BRITTO
ஆரம்பம்: 09-02-1995 பி.ப. 3 மணி
(சி/534)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



பலாலி தெற்கு - வயாவிளான்
**செல்லத்துரை உலகநாதன் J.P**
(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)

மண்ணில்: 1928 — 06 — 05
விண்ணில்: 1995 — 01 — 09

பவ ஆண்டு மார்கழியில் பூர்வபக்க அட்டமியில் சுப நாளாம் ரேவதிசேர் திங்கள் உதயத்தில் சிவகதியே சேர்ந்திட்ட எந்தை உலகநாதன் தவவாழ்வைப் போற்றிநாம் தலைதாழ்த்தித் தொழுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

''ராஜவில்லா''
மல்லாகம்.

[35091]

## மரண அறிவித்தல்

### R. P. குணரட்ணம் (தாடிக்குணம்)

[வானொலி உரிமையாளர்]

R. P. குணரட்ணம் 5-2-95 இல் காலமானார்.
இவர்காலஞ்சென்ற திரு திருமதி இறப்பியல் அவர்களின் மகனும், அல்போன்சஸ் [ஓய்வு பெற்ற ஆசிரியர்], வேதநாயகம் விக்ரர் (ஆசிரியர் சென்பீற்றர்ஸ் கல்லூரி கொழும்பு), நீற்றா, கமலா, செல்வறாணி ஆகியோரின் சகோதரனும், மகடலின் (ஆசிரியை சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்), ரெறன்ஸ் (ஓய்வு பெற்ற கட்டட மேற்பார்வையாளர்), அற்புதறோஜா (தாதி போதனா வைத்தியசாலை நாகம), யேசுதாசன் ஆகியோரின் மைத்துனரும், அன்ரனீற்றா [ஆசிரியை திருக்குடும்பக் கன்னியர் மடம்], அவர்களின் சிறிய தந்தையும், யூட், ஷமினி ஆகியோரின் மாமனாரும், சஞ்சீவ்குமார், றஜீகுமார், நிஷானி ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (9-2-95) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற் திருப்பலியின்பின், புனிதகொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்
இ. அல்போன்சஸ்
(சகோதரன்)

16 ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
பாஷையூர்.

(35097)

# சிறு சிறு சம்பவங்கள் நடந்தாலும் போர் இடைநிறுத்தம் தொடர்கிறது

## நாடாளுமன்றில் கேணல் ரத்வத்த தகவல்

கொழும்பு, பெப். 8
சிறுசிறு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தாலும் கூட அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்று மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதுபோன்ற நிலைமைகளில் சிறு சிறு சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்க முடியாது. இருந்த போதும் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண நடவடிக்கை எடுத்து வருகிறது என்று அமைச்சர் கூறினார்.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சில பகுதிகளிலும் கொழும்பு கம்பஹா மாவட்டங்களின் சில பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பது பற்றிய பிரேரணை மீது அமைச்சர் உரையாற்றினார்.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசாங்கம் உண்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் —

மீன் பிடிப்பதில் சம்பந்தப்பட்ட தடைகள் நீக்கப்பட்டமை, வடபகுதிக்கு பொருளாதாரத் தடைகள் சிலவற்றை அகற்றியமை ஆகியவற்றை அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள் —

பேச்சுவார்த்தைகள் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று தற்போது தமிழ் மக்கள் கருதுகின்றார்கள் —

சமாதான முயற்சிகள் தற்போது ஆரம்ப கட்டத்தில் உள்ளன —

இருந்தபோதும் அரசாங்கம் இந்தப் பிரச்சினையை விரைவில தீர்த்து வைக்க உறுதி பூண்டிருக்கிறது — என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. சி. எஸ். ஹமீத் பேசும் போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் பற்றிய விவரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றும் தற்போதுள்ள நிலைமை பற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ஒ-க)

### "ஹைஏஸ்"...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேனநாயக்கா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தாம் சம்பவம் குறித்து வசந்த விக்கிரமதுங்காவுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் அமைச்சர் சொன்னார்.

இச்சம்பவம் குறித்து நாடாளுமன்றத்தில் அமைச்சர் ரத்வத்த குறிப்பிடுகையில்—

இத்தகைய சம்பவங்களை அரசாங்கம் முற்றாக கண்டிக்கிறது என்றும், இது சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு பொலீஸ் மா அதிபர் பணிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தாக்குதலில் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ. தே. கட்சி எம்.பியான ஏ. சி. எஸ் ஹமீத் நேற்று நாடாளுமன்றத்தில் இச்சம்பவம் பற்றி முறைப்பாடு செய்தார். (ஒ-க-6-4)

### பூநகரி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயல்படத் தொடங்கும்.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை மீறியதாக பாரிய சம்பவம் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை

உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளில் இருந்து அரசாங்கம் மாறுபடவில்லை.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் அனைத்தும் வெளிப்படையாகவே நடத்தப்படும். பொது மக்களுக்கு தெரிவிக்காமல் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படமாட்டாது — என்றார். [அ-4]

### ஆளும் காங்கிரஸ்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் உறுப்பினர்களில் ஒருவரான ஏ. கே. அன்ரனி மட்டும் குழுவின் முடிவு குறித்து கவலை தெரிவித்தார்.

அர்ஜுன்சிங் தமது அமைச்சர் பதவியை கடந்த டிசம்பர் மாதத்தில் ராஜினமாச் செய்திருந்தார்.

கட்சியின் தலைமைப்பீடத்துக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கடந்த 24 ஆம் திகதி கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

அர்ஜுன் சிங்கின் வெளியேற்றத்தால் ஆளும் காங்கிரஸ் கட்சியில் புதிய கட்டம் ஒன்று உருவாகும் என்றும் கட்சியில் பெரும் நெருக்கடிகள் தோன்றும் என்றும் அவதானிகள் தெரிவித்தனர். (அ)

## அமெரிக்காவில் இருந்துவந்த பேராசிரியர்

வடமாராட்சி, பெப். 8
அமெரிக்காவில் கடமையாற்றும் தமிழ் டாக்டர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

மல்லாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் டேவிட் நேசராசா ரட்ணவேல் மனநோய் வைத்திய நிபுணராவார்

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் குடியேறிய இவர் இங்கு மருத்துவக்கல்லூரியில் விரிவுரைகள் நிகழ்த்த உள்ளார் "போரின் உளவியல் அம்சங்கள்" என்னும் பொருளில் இன்றுமாலை யாழ். போதனாவைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் அவர் உரை நிகழ்த்த உள்ளார்.

டாக்டர் ரட்ணவேல் விமானம் மூலம் பலாலிவந்து அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தார். (173)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கும் இடையிலான சிநேகித பூர்வமான கிரிக்கெட் போட்டி இன்று காலை 8. 30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (ஒ-20)

## சுழியில் சிக்கி மரணம்

வடமராட்சி, பெப் 8
உல்லாசப் பயணம் சென்றவர் கடலில் குளித்துக்கொண்டிருக்கும்போது சுழியில் சிக்கி மரணமானார்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி ராஜா என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மணற்காட்டில் நடந்த இச்சம்பவத்தில் மரணமான இவரது சடலம் நேற்றுக் காலை மணற்காடுக் கடலில் கரை ஒதுங்கியது. (ஒ 173)

யாழ். குடாநாட்டில்

# நான்காம் காலாண்டில் 139 சிசு மரணங்கள்

யாழ்ப்பாணம், பெப். 8
யாழ்குடா நாட்டுப் பகுதியில் வருட கடந்த நான்காம் காலாண்டில் மட்டும் 139 சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. 2 ஆயிரத்து 861 குழந்தைகள் உயிருடன் பிறந்துள்ளன. சிசு மரணத்தில் 26 வீதம் போசாக்கு குறைவினாலும் 23 வீதம் சளி சுரத்தினாலும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சென்ற வருடம் முழுவதிலும் 413 சிசு மரணங்களும் 11 ஆயிரத்து 61 பிறப்புகளும் —

1993ஆம் ஆண்டில் 366 சிசு மரணங்களும் 10 ஆயிரத்து 373 பிறப்புக்களும் —

1992 ஆம் ஆண்டில் 341 சிசு மரணங்களும் 11 ஆயிரத்து 668 பிறப்புக்களும் நிகழ்ந்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கணிப்பீடுகளில் இருந்து தெரிய வந்துள்ளது

# நல்லவர்களுடன் இணைந்து வல்லவர்கள் செயற்படுக

## கூட்டுறவுப் பொறுப்பாளர் உரை

நாங்கள் எல்லோரும் வல்லவர்கள் என்பதை விட ஒரு நல்லவருடன் ஏனைய வல்லவர்கள் இணைந்து செயற்பட்டால் இவர்களின் ஒருமித்த செயற்பாடு நாட்டின் வளர்ச்சிக்கு பயனுள்ளதாக அமையும். பலர் தமது இரத்தத்தினை வேர்வையாக்கி உழைத்து உருவாக்கிய இச்சங்கத்தை அனைவரும் ஒன்றுபட்டு ஆலமரம் போல் வளர்க்க பாடுபட வேண்டுமே தவிர இவர்களின் இரத்தத்தில் குளிர்காய விரும்பக் கூடாது.

சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில்—தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பொறுப்பாளர் பரணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கத் தலைவர் பொ. சின்னராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடமாநிலகூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் [ப/தெ] தி. சபாரத்தினம், சமாச முகாமையாளர் கி. சிவனேசன், தலைமைக் காரியாலய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் ஆ. தெய்வேந்திரம் உட்படபலர் உரையாற்றினர்.

கூட்ட முடிவில் சங்க பணிப்பாளர் சபை தெரிவும் இடம்பெற்றது. [இ-117]

## இலவசமாக தென்னங்கன்று

யாழ்ப்பாணம், பெப். 8
யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் 225 தென்னங்கன்றுகளை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது

அரசியலமைப்பு யோசனைகள் தயாரிக்க

# தமிழ்க் கட்சிகளின் சார்பில் குழு நியமிக்க தீர்மானம்

கொழும்பு, ஜன. 8
அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்க் கட்சிகளின் சார்பில், கூட்டாக முன்வைப்பதற்கான யோசனைகளை தயாரிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட இருக்கிறது.

இது தொடர்பான தீர்மானம் இ தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் நடைபெற்ற தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் சகலவற்றினதும் தலைவர்களுக்கு இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு இ. தொ. காவின் சார்பில் விடுக்கப்பட்டிருந்தது.

இக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும், புளொட் தலைவர் சித்தார்த்தனும் கலந்து கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினதும், மலையக மக்கள் முன்னணியினதும் சார்பில் எவரும் கலந்துகொள்ளவில்லை.

இ. தொ. கா. சார்பில் அதன் தலைவர் தொண்டமான், எம்பிக்களான பி.பி. தேவராஜ். ஆர். யோகராஜன், முத்துசிவலிங்கம், ஆறுமுகம் தொண்டமான், புளொட் சார்பில் சித்தார்த்தனை தவிர மாணிக்கம் பிள்ளை, குரு, சிவா, மாதவன், ஈ பி. டி. பி. சார்பில் டக்ளஸை தவிர சிவதாசன், ரமேஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளை தயாரிப்பதற்கான குழுவுக்கு இ தொ. கா. சார்பில் யோகராஜனும் தேவராஜும் நியமிக்கப்பட்டுள்ளதாக தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவித்த திரு. தொண்டமான் முதல் கூட்டத்தில் கலந்து கொள்ளாத தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இரண்டாவது கூட்டத்தில் கலந்து கொள்வர் என்று எதிர்பார்ப்பதாக நம்பிக்கை தெரிவித்தார். (ஒ)

## நோயாளர் கவனத்திற்கு

கப்பலில் கொழும்பு சென்று சிகிச்சை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் தங்கள் அடையாள அட்டை மற்றும் ஆவணங்களுடன் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். போதனாவைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு வைத்திய சாலை பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-17)

# எதையும் தாங்கும் இதயம் சமூக சேவைக்குத் தேவை

## அபி. திட்ட கருத்தரங்கில் உரை

வலி. தெற்கு, பெப் 8
"சமூக சேவையில் ஈடுபடுவோருக்கு எதையும் தாங்கும் மனப்பக்குவம் இருக்க வேண்டும். நாம் தூயமனதுடன் செயல்பட வேண்டும்."

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. மு. க. முருகையா தொல்புரம் கமநல சேவை நிலையத்தில நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரை நிகழ்த்துகையில் இவ்வாறு கூறினார்.

காரைநகர் மத்தி பிரிவு பொது அமைப்புகளின் இணையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட காரைநகர் மத்தி பிரிவுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சம்பந்தமான கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு கூறினார்

மேற்படி இணையத்தின் தலைவர் திரு. ச. நாகராசா தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. முருகையா மேலும் பேசுகையில் கூறியதாவது

சமதர்மம், தார்மீகம் போன்ற தன்மைகள் உருவாகும் போது பல நல்ல திட்டங்கள் உருவாகின்றன.

இந்த இணையத்தினர் நல்ல பல திட்டங்களை உருவாக்க வேண்டும். அவற்றை செயற்படுத்தி மக்கள் நன்மையடையச் செய்ய வேண்டும். மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய திட்டங்களை செயற்படுத்தும் போது எம்மாலான சகல உதவிகளையும் வழங்குவோம்" என்றார்.

இந்த நிகழ்வின் போது மாதர் அபிவிருத்திச் சங்கம், கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், கட்டடத் தொழிலாளர் கூட்டுதவுச் சங்கம், பனை - தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## பஸ் சேவையை நடத்துக!

யாழ். நகருக்கும் கொழும்புத்துறைக்கும் இடையிலான பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றச் சனசமூக நிலையத்தினர் சிற்றூர்தி போக்குவரத்து பகுதியினரைக் கேட்டுள்ளனர்.

## நாய்கள் அழிப்பு

மானிப்பாய் பிரதேச பெருந்தெருக்களில் காணப்பட்ட சுமார் 300 கட்டாக்காலி நாய்கள் கடந்த 23 ஆம் திகதி முதல் பிடித்து அழிக்கப்பட்டுள்ளதாகவும்.

உள்ளூர் கிராம வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி நாய்களையும் பிடித்து அழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

பிரதேச செயலக வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது. (90-5)


நுணாவில்குளம்
கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்
மண்டலாபிஷேக 3ஆம் நாள் நிகழ்வு
திரு. ச. சின்னராசா அவர்கள் தலைமையில் நடைபெறும்
விசேட நிகழ்வாக: பட்டி மன்றம்
தலைப்பு; "பெண்மையை பெரிதும் மேம்படுத்தும் இலக்கியம்
✶ கம்பராமாயணமா? ✶ சிலப்பதிகாரமா?
இடம்: ஆலய மண்டபம்
காலம்: 09 — 02 — 1995 (வியாழக்கிழமை) மாலை 7 மணி
நடுவர்: திரு. பொன். கணேசமூர்த்தி
வாதாடுவோர்
கம்பராமாயணம்
திரு. வேல்நம்பி (அமுதசுரபி கலா மன்றம்)
திரு. விஜயசுந்தரம் (அமுதசுரபி கலா மன்றம்)
திரு. நிதியானந்தன் (அமுதசுரபி கலா மன்றம்)
சிலப்பதிகாரம்
திரு. முத்துலிங்கம் (ஆசிரியர்)
திரு. வாமன் (ஆசிரியர்)
திரு. கோக்கலே (ஆசிரியர்)
அன்பர்கள், அடியார்கள் அனைவரும் வந்து இந் நிகழ்வினை சிறப்பித்து அம்பாளின் இஷ்டசித்திகளை பெற்று உய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
[35089]
இங்ஙனம்:
விழா உபயகாரர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட் ... இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 - 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org